சுருக்கம்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் – கைத்திறத் தொழிலில் பாரம்பரிய கலைகளை பாதுகாப்பவர்களுக்கு "வாழும் கைவினைப் பொக்கிஷங்கள்" எனும் விருது மற்றும் ஸ்ரீரங்கத்தில் 100 மகளிருக்கு தஞ்சாவூர் ஓவியக் கலையில் ஒரு வருட பயிற்சி அளிப்பது – நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(ஜி2)த்துறை

அரசாணை (நிலை) எண். 211

நாள்: 19.09.2013
விஜய, புரட்டாசி 03,
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்க:

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அவர்களின் கடிதம் ந. க. எண். 944 / டிசி / 2013, நாள் 20.05.2013.

-----

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.05.2013 அன்று பேரவை விதி 110–ன் கீழ் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தை பொறுத்து பின்வரும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன:–

அ. 16 விதமான கைத்திறன் தொழில்களில் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட கை தேர்ந்த 65 வயதிற்கு மேற்பட்ட 10 கைவினைஞர்கள் தேர்வுக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கம், தாமிர பட்டயம், ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கிய "வாழும் கைவினைப் பொக்கிஷங்கள்" என்ற விருது வழங்கப்படும். இத்திட்டம் 2013–2014–ஆம் ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலமாக செயல்படுத்தப்படும்.

ஆ. திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில், திறன் மிக்க கைவினைஞர்களைக் கொண்டு, 100 மகளிருக்கு தஞ்சாவூர் ஓவியங்கள் தயாரித்தலுக்கான ஓராண்டு பயிற்சி அளிக்கப்படும். மேற்படி பயிற்சிக்கு தேவைப்படும் மூலப்பொருட்களை வழங்குவதுடன் பயிற்சியாளர்களுக்கு ரூ.2000/– மாத உதவித் தொகையும், பயிற்சியின் முடிவில் உரிய சான்றிதழும் வழங்கப்படும். இத்திட்டம் ரூ.83.00 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும்.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அவர்கள் கைத்திறத் தொழிலின் பாரம்பரிய கலைகளை பாதுகாப்பவர்களுக்கு "வாழும் கைவினைப் பொக்கிஷங்கள்" எனும் விருதினை 10 நபர்களுக்கு வழங்க ரூ.15.00 இலட்சமும், திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் 100 மகளிருக்கு ஒரு வருட தஞ்சாவூர் ஓவியம் தயாரித்தலுக்கான பயிற்சி அளிப்பதற்கு ரூ.83.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.98.00 இலட்சத்தினை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயலாக்கம் செய்யும் பொருட்டு தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அவர்களின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின் "வாழும் கைவினைப் பொக்கிஷங்கள்" எனும் விருது மற்றும் ஸ்ரீரங்கத்தில், 100 மகளிருக்கு ஒரு வருட தஞ்சாவூர் ஓவிய பயிற்சி அளிப்பதற்காக ரூ.15.00 இலட்சம் மற்றும் ரூ.83.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.98.00 இலட்சம் (ரூபாய் தொண்ணூற்று எட்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> "2851.00 – கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 104 – கைத்திறத் தொழில்கள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JK– தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதியுதவி –09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
> (த.தொ.கு 2851–00–104-JK–0937)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது பணி (New Service) குறித்த திட்டமாகும். இதற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணைகள் நிதி (வரவு – செலவு – பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளுடன் நிதி (வரவு – செலவு – பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு தொழில் ஆணையர் மற்றும் தொழில்கள் மற்றும் வணிகம் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வரவு – செலவு – பொது–1/தொழில்கள்)த் துறைக்கு அனுப்புமாறு தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று, தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அவர்களுக்கு வழங்க, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களுக்கு உரிய அதிகாரம் வழங்கப்படுகிறது.

7. இவ்விரு திட்டங்களையும் செயல்படுத்துவது குறித்த விவரங்களையும், இவ்விரு திட்டங்களுக்கென மேலே ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான இனவாரியான செலவின விவரங்களையும் அரசுக்கு தெரிவிக்குமாறும் ஒப்பளிக்கப்பட்ட தொகையில் சேமிப்பு ஏற்படின், அத்தொகையினை உடனடியாக அரசு கணக்கில் திரும்ப செலுத்துமாறும் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 49881 / தொழில்கள் / 2013, நாள் 19.09.2013-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1246 (ஆயிரத்து இருநூற்று நாற்பத்தாறு).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை -05.
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், சென்னை-02.
தலைமை கணக்காயர், சென்னை -18.
மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை -18.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -09.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -09.
மாண்புமிகு அமைச்சர் (ஊரகத்தொழில்கள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -09.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-09.
ஆணையர், அரசு தகவல் மையம், சென்னை-25.
நிதி(தொழில்கள்/ வரவு-செலவு -பொது-I/வரவு-செலவு -பொது-II)த்துறை, சென்னை-09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
19.9.13.